# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 14/ந/2024
நாள் 07.05.2025

| | |
|---|---|
| திரு. மு. திருஞானசம்மந்தம்,<br>செயல் அலுவலர் (ஓய்வு), கடலூர் மாவட்டம். | – முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>உளுந்தூர்பேட்டை நகராட்சி,<br>கள்ளக்குறிச்சி மாவட்டம். | – எதிர்மனுதாரர் |

கடலூர் மாவட்டம், கடலூர் துறைமுகம், காமாட்சி அம்மன் கோவில் தெரு, கதவு எண். 100-A முகவரியில் வசிக்கும் திரு. மு. திருஞானசம்மந்தம் என்பவரின் 12.11.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.11.2024 அன்று பெறப்பட்டு, 14/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், கடலூர் துறைமுகம், காமாட்சி அம்மன் கோவில் தெரு, கதவு எண். 100-A முகவரியில் வசிக்கும் திரு. மு. திருஞானசம்மந்தம் என்பவரின் 12.11.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை (06.08.2021 முதல் 30.09.2021) பேரூராட்சியில் நான் செயல் அலுவலராக பணிபுரிந்து தணிக்கை ஆண்டு 2021–22 பத்தி எண்.13 காலம் கடந்த குடிநீர் கட்டணம் 40% தொகை:ரூ.89,728/– (ரூபாய் எண்பத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று இருபத்தி எட்டு மட்டும்) நாள் 23.01.2023–ல் செலுத்தியுள்ளேன்.

உள்ளாட்சி தணிக்கை இயக்குநர் சுற்றறிக்கை 07/2012 தணிக்கை தடை நீக்கம் மூன்று மாதங்களை விடக் குறைவான காலத்திற்கு இப்பணியிடங்களில் பொறுப்பில் இருந்திருந்தால், தனியரை பொறுப்பிலிருந்து விடுவிக்கலாம் ஆனால் நான் உளுந்தூர்பேட்டையில் பணியாற்றிய மூன்று மாதத்திற்குள் 40% தொகை ரூ.89,728/– (ரூபாய் எண்பத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று இருபத்தி எட்டு மட்டும்) நாள் 23.01.2023–ல் செலுத்தியுள்ளேன்.

உள்ளாட்சி தணிக்கை இயக்குநர், தணிக்கை சிறப்பு கடிதம் பத்தி எண்.13 செயல் அலுவலர் விகிதாச்சார அடிப்படையில் செயல் அலுவலருக்கு எந்த தொகையும் குறிக்கப்படவில்லை. உள்ளாட்சி தணிக்கைத்துறை உதவி இயக்குநர், விழுப்புரம், என்னை

தணிக்கை தடை பொறுப்பிலிருந்து விடுவிக்க 40% செலுத்துமாறு வாய்மொழியாக கேட்டுக்கொண்டார். நான் 40% தொகை ரூ.89,728/– செலுத்தியுள்ளேன். ஆணையர் உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு எனது விண்ணப்பம் அனுப்பியுள்ளேன். ஆணையர் நகராட்சி அலுவலகத்தில் இருந்து எந்த பதிலும் வரவில்லை" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 21.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் விரிவான அறிக்கை கோரப்பட்டது.

3. கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையர் தனது 30.01.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"குற்றச்சாட்டு முறையீட்டின் தன்மை மற்றும் விவரம் – கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேரூராட்சி (தற்போது நகராட்சி) 06.08.2021 முதல் 30.09.2021 வரை) நான் செயல் அலுவலராக பணிபுரிந்தது தணிக்கை ஆண்டு 2021–22 பத்தி எண்.13, காலம் கடந்த குடிநீர் கட்டணம் 40 % தொகை ரூ. 89728/– (ரூபாய் எண்பத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று இருபத்தி எட்டு மட்டும்) நாள் 23.01.2023–ல் செலுத்தியுள்ளேன். திரும்ப வழங்கக் கோருதல் தொடர்பாக.

உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் (தற்போது நகராட்சி) 06.08. 2021 முதல் 30.09.2021 வரை) செயல் அலுவலராக பணிபுரிந்த திரு. மு. திருஞானசம்மந்தம் என்பவர், வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் பொருட்டு தணிக்கை அறிக்கை 2021–22 பத்தி எண்.13, காலம் கடந்த வரியினங்களில் அன்னாரது பெயரினை பொறுப்பு நீக்கம் செய்வதற்காக, குடிநீர் கட்டணம் நிலுவை தொகையில் 40 % தொகை ரூ. 89728/– ஐ நகராட்சி கருவூலத்தில் செ.சீ.எண்.176/UM1/1/2022–2023/0007530, நாள் 23.01.2023–ல் செலுத்தியுள்ளார். மேற்படி அன்னாரது பெயரினை மண்டல இணை இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, வேலூர் மண்டலம் அவர்களின் மேற்குறிப்பு ந.க.எண்.82/அ3/2023 நாள் 25.01.2023ன்படி பத்தியினை நிலுவையில் வைத்து, பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேற்படி பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் கடந்த வரியினங்கள் வசூலிக்கப்படாததால், பத்தி எண்.13/2021–22 தற்போது வரை நிலுவையில் உள்ளது. எனவே பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் கடந்த வரியினங்கள் வசூலிக்கப்பட்டு பத்தி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் குற்றச்சாட்டு முறையிடுபவருக்கு செலுத்தப்பட்ட முன்வைப்பு தொகை திரும்ப வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையரும் 03.03.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.02.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரரான திரு. மு. திருஞானசம்மந்தம் 03.03.2025அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"நான் உளுந்தூர் பேட்டை நகராட்சியில் 6.8.2021 முதல் 30.9.2021 வரை (இரண்டு மாத காலம்) செயல் அலுவலராகப் பணிபுந்துள்ளேன். எனது பணிகாலத்தில் பொது மக்களிடமிருந்து பெறவேண்டிய குடிநீர் கட்டணம் வசூல் செய்யாததன் காரணமாக, தணிக்கை தடையில் ஏற்படுத்தப்பட்ட தொகையில் 40 சதவீத தொகை ரூ.89,728/–ஐ கடந்த 23.1.2023–இல் செலுத்தினேன். அதன்பின்னரே கடந்த 31.1.2023–இல் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டேன். ஆனால் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்ககம், சென்னை, சுற்றறிக்கை எண்.07/2012, நாள் 22.02.2012–இல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

"காலங்கடந்த வரி மற்றும் வரியில்லா இனங்களை பொறுத்தமட்டில் ஆணையர் / நிர்வாக அலுவலர் வரி மற்றும் வரியில்லா இனங்கள் காலாவதியாகும் காலம் தவிர்த்து மூன்று மாதங்களை விடக் குறைவான காலத்திற்கு இப்பணியிடங்களில் பொறுப்பில் இருந்திருந்தால் தனியரை பொறுப்பிலிருந்து விடுவிக்கலாம்"

எனவே, நான் செலுத்திய தொகை ரூ.89,728/—ஐ திரும்ப பெற உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு பரிந்துரை செய்யுமாறு இம்முறை மன்றத்தில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையர் திரு ம. இளவரசன் என்பவர் 03.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவர் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரரின் பதவி காலத்தில் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய காலம் கடந்த குடிநீர் கட்டணம் வரிபாக்கி தொகை ரூ.12,84,562/— நிலுவையில் இருந்தது தற்போது அது ரூ. 3,11,400/— ஆக குறைந்துள்ளது.

மேலும், உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்ககம், சென்னை, சுற்றறிக்கை எண்.07/2012, நாள் 22.02.2012—ன்படி "காலங்கடந்த வரி மற்றும் வரியில்லா இனங்களை பொறுத்தமட்டில் ஆணையர் / நிர்வாக அலுவலர், வரி மற்றும் வரியில்லா இனங்கள் காலாவதியாகும் காலம் தவிர்த்து மூன்று மாதங்களை விடக் குறைவான காலத்திற்கு இப்பணியிடங்களில் பொறுப்பில் இருந்திருந்தால் தனியரை பொறுப்பிலிருந்து விடுவிக்கலாம்".

இருப்பினும் மனுதாரர் தனது மனுவில் உள்ளாட்சி தணிக்கை துறை, உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்கள், குடிநீர் கட்டண நிலுவைத் தொகையில் 40 சதவீத தொகை செலுத்திய பின்னரே மனுதாரரை பொறுப்பிலிருந்து நீக்கம் செய்யலாம் என வாய்மொழியாக தெரிவித்ததன் அடிப்படையில் மனுதாரர் ரூ.89,728/—ஐ நகராட்சிக்கு செலுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, நிலுவை பாக்கி வசூல் செய்து, தணிக்கை தடை நீக்கப்பட்ட பின்னர் மனுதாரருக்கு வழங்க வேண்டிய ரூ.89,728/—ஐ அவருக்கு திரும்ப வழங்க இயலும் என்பதை இம்முறை மன்ற நடுவத்தின் முன் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் திரு. மு. திருஞானசம்மந்தம் என்பவர் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் 06.08.2021 முதல் 30.09.2021 வரை செயல் அலுவலராக பணிபுரிந்த போது காலம் கடந்த குடிநீர் கட்டணம் வசூல் செய்யாததின் காரணமாக ஏற்பட்ட நிலுவைத் தொகையில், தான் செலுத்தியுள்ள 40% தொகை ரூ.89,728/—ஐ வழங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நேர்வில், உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்ககத்தின் சுற்றறிக்கை எண்.07/2012, நாள் 22.02.2012—ன்படி காலங்கடந்த வரி மற்றும் வரியில்லா இனங்களை பொறுத்தமட்டில் ஆணையர் / நிர்வாக அலுவலர் வரி மற்றும் வரியில்லா இனங்கள் காலாவதியாகும் காலம் தவிர்த்து, மூன்று மாதங்களை விடக் குறைவான காலத்திற்கு இப்பணியிடங்களில் பொறுப்பில் இருந்திருந்தால் அன்னாரை பொறுப்பிலிருந்து விடுவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் திரு. மு. திருஞானசம்மந்தம் என்பவர் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் மூன்று மாதத்திற்கும் குறைவான காலமே (06.08.2021 முதல் 30.09.2021 வரை) செயல் அலுவலராக பணிபுரிந்துள்ள நிலையிலும், காலங்கடந்த வரி நிலுவையில் 40% சதவீத தொகை செலுத்த வாய்மொழியாக மனுதாரர்க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பொருண்மைகள் உள்ளாட்சி நிதி

தணிக்கை இயக்ககத்தின் சுற்றறிக்கை எண்.07/2012, நாள் 22.02.2012 முறையாக கடைபிடிக்கப்படவில்லை என்பதனை உணர்த்துகிறது.

இந்நிலையில், பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய காலம் கடந்த குடிநீர் கட்டணம் வரிபாக்கி நிலுவை தொகை ரூ.12,84,562/– லிருந்து ரூ.3,11,400/– ஆக குறைந்துள்ளதாக நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரரின் கோரிக்கை மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்ககத்தின் சுற்றறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவித்து, உரிய ஆணை பெற்று, அதனடிப்படையில் மனுதாரருக்கு உரிய நிவாரணம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, மே திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. மு. திருஞானசம்மந்தம்
கதவு எண். 100-A,
காமாட்சி அம்மன் கோவில் தெரு,
கடலூர் துறைமுகம், கடலூர் மாவட்டம்,

2) நகராட்சி ஆணையர்,
உளுந்தூர்பேட்டை நகராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

9/5/25
செயலாளர்